## ‘திராவிட மாடல்’ நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில்

# நவீன நெல் சேமிப்புத் தளங்கள் - நெல் கொள்முதலில் சாதனை!

## சட்டப் பேரவையில் – உணவு மற்றும் கூட்டுறவுத்துறை மானிய விவாதத்தில் – முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

சென்னை, ஆக. 23-

**சட்டப் பேரவையில் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் நவீன நெல் சேமிப்பு தளங்கள் மற்றும் நெல் கொள்முதலில் சாதனை நிகழ்ந்துள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் - முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

சட்டப்பேரவையில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் முன்னாள் உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாட்டையும் தமிழர்களையும் தலைநிமிரச் செய்த தந்தை பெரியார் அவர்களையும் பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன்.

சங்கத் தமிழையும் நவீனக் கணினியையும் இணைத்து தங்கத் தமிழ்நாட்டை உருவாக்கிய தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரத் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயில் கொண்டுள்ள திசை நோக்கி வணங்குகிறேன்.

1996 முதல் தொடர்ச்சியாக ஏழு முறை ஒட்டன்சத்திரம் தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பளித்து தொடர்ந்து நான் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்குப் பெரிதும் துணைபுரிந்த போற்றுதலையும் தூற்றுதலையும் சமமாகக் கருதி எதிரிகளையும் பெருந்தன்மையுடன் நடத்தி சுதந்திர இந்தியாவில் இதுவரை எந்த முதலமைச்சரும் செய்யாத திட்டங்களைத் தமிழகத்தில் நிறைவேற்றி தேர்தல் சமயத்தில் சொன்ன வாக்குறுதி மட்டுமல்லாமல் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி

தமிழகத்தை பொருளாதாரத்தில் முதன்மை மாநிலமாக 11-19 சதவீதம் உயர்த்தி முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக திகழ்ந்து ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்துக் குடும்பங்களையும் பயன்பெறச் செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எனது மானமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை; துணிச்சலின் மறு உருவம் விளையாட்டுத் துறையிலும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையிலும் முத்திரை பதித்த வருங்கால தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கும் ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் மேனாள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் இ.பெரியசாமி அவர்களுக்கும் எதிர்க்கட்சி கொறடா அண்ணன் ஏ.வ. வேலு அவர்களுக்கும் சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்களுக்கும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1996ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஏழாவது முறையாக ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் என்னைத் தேர்ந்தெடுத்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய உயிருக்கும் உயிரான ஒட்டன்சத்திரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது வெற்றிக்காக பாடுபட்ட கழக நிர்வாகிகளுக்கும் கழகத் தோழர்களுக்கும் தோழமைக் கட்சிகளின் தோழர்களுக்கும் நண்பர்களுக்கும் பல்வேறு சமுதாய அமைப்புகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் தாய் தந்தைக்கும் என் குடும்பத்தாருக்கும் அன்பு கலந்த வணக்கம்.

இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இந்தியாவில் இந்திய உணவுக் கழகம் மட்டுமே நெல் மற்றும் கோதுமை கொள்முதல் செய்து வந்த காலத்தில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில் 1972ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை ஆரம்பித்து தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாம் தஞ்சை விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல் மணிகளை கொள்முதல் செய்து விவசாயிகளைப் பாதுகாத்த அரசு தலைவர் கலைஞர் தலைமையிலான அரசு என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

### நெல் கொள்முதலில் சாதனை!

எங்கள் ஆட்சியில் பொன்விழா கண்டு கடந்த அய்ந்தாண்டுகளில் வரலாற்றுச் சாதனையாக 2 கோடியே 38 இலட்சத்து 9 ஆயிரத்து 500 டன் நெல்லைக் கொள்முதல் செய்தோம்.

வரலாற்றுச் சாதனையாக 2025-2026 குறுவைப் பருவத்தில் 15 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்தோம். முதல்வர் அக்டோபர் 2 விடுமுறை நாளிலும் பின்னர் ஒரு முறையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியும் எங்களுக்கு கட்டளையிட்டும் நெல் கொள்முதல் மற்றும் நகர்வையும் விரைவுபடுத்தினார்கள்.

செப்டம்பர் முதல் நாளே அக்டோபர் முதல் உயர்த்தி வழங்குகிற கொள்முதல் விலையுடன் நெல் கொள்முதல் வழக்கமாக அக்டோபர் முதல் நாளிலிருந்து தான் நெல் கொள்முதல் தொடங்கப்படும். அன்றிலிருந்து தான் ஒன்றிய அரசும் மாநில அரசும் சேர்ந்து உயர்த்தப்பட்ட விலையை விவசாயிகளுக்கு வழங்குவது வழக்கம்.

செப்டம்பரிலேயே அறுவடை செய்தாலும் அக்டோபர் வரை காத்திருந்து மழைக்காலத்தில் கொள்முதல் செய்திடும் நிலையை மாற்றிட ஒன்றிய பிரதமருக்குக் கடிதம் எழுதி உயர்த்தப்பட்ட விலையில் செப்டம்பர் முதல் நாளிலிருந்தே நெல் கொள்முதல் பணியினைத் தொடங்க வழி வகுத்தவர் எங்கள் தலைவர்.

### நெல் கொள்முதல் விலை ஊக்கத் தொகை!

தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் 2007-2008-ஆம் ஆண்டு ரகத்திற்கு ரூ.70ம் பொது நெல்லுக்கான ஊக்கத் தொகை சன்னரகத்திற்கு ரூ.50ம் முதன் முதலாக வழங்கப்பட்டது.

அதற்குப் பின்பு மீண்டும் கழக அரசு 2021 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப் பின்னர் தான் நெல்லுக்கான மாநில அரசின் ஊக்கத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு முதல் நெல்லுக்கான ஊக்கத் தொகையைக் குவிண்டால் ஒன்றுக்கு படிப்படியாக உயர்த்திக் குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகத்திற்கு 156/ ரூபாயும் பொது ரகத்திற்கு 131/ரூபாயும் வழங்கினோம்.

## வீடு தேடி பொருள் வழங்கும் ‘தாயுமானவர்’ திட்டம்!

எங்களுடைய ஐந்தாண்டு நெல் கொள்முதல் செய்ததில் விவசாயிகளுக்கு மாநில அரசின் ஊக்கத் தொகையாக 2 ஆயிரத்து 619 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கினோம்.

நீங்கள் சன்ன ரகத்திற்கு 159/ரூபாயும் பொது ரகத்திற்கு 28/ ரூபாயும் தான் தற்சமயம் உயர்த்தி கொடுத்துள்ளீர்கள்.

டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் அதிகமாகப் பயிரிடுவது பொது ரக நெல் தான் எனவே, சன்னரகத்திற்கு இணையாக பொது ரகத்திற்கும் ஊக்கத் தொகையை உயர்த்தித் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### அரிசிக்குப் பதிலாக கேழ்வரகு வழங்கல்!

தருமபுரி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் அரிசிக்குப் பதிலாக கேழ்வரகு 2 கிலோ

தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் விவசாயிகளிடமிருந்து கிலோ ஒன்றிற்கு 48 ரூபாய் 86 பைசா என்ற விலையில் கேழ்வரகு கொள்முதல் செய்தோம்.

### உழவர் உதவி மையம்!

விவசாயிகள் ஆலோசனைகளையும் புகார்களையும் தெரிவிக்க கட்டணமில்லா தொலைபேசி சேவை கொண்ட இணைப்புகள் துவக்கி வைக்கப்பட்டது

அதோடு அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் புகார் பெட்டி, தகவல் பலகை அமைத்து அனைத்து அலுவலரின் அலைபேசியையும் அதில் இடம் பெறச் செய்தோம். தவறு செய்த பட்டியல் எழுத்தர், உதவுபவர், காவலர் என சுமார் 56 நபர்கள் மீது நடவடிக்கை எடுத்தோம்.

### நவீன நெல் சேமிப்புத் தளங்கள்!

எங்கள் ஆட்சியில் இந்தியாவில் முதல் முறையாக தமிழ்நாட்டில் மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டன.

18 மாவட்டங்களில் 54 இடங்களில் 7.33 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் திறனுடன் 889 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன நெல் சேமிப்புத் தளங்கள் கட்ட திட்டமிட்டு 4 இலட்சத்து 3 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தளங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

3 இலட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தளங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

90 கோடி மதிப்பீட்டில் வாணிபக் கழகத்தின் பழைய கிடங்குகள் புதுப்பிக்கப்பட்டன.

ஒரு இலட்சத்து ஆயிரத்து 250 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய வட்டச் செயல்முறை கிடங்குகள் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறக்கப்பட்டும் கட்டப்பட்டும் வருகின்றன.

ஆக மொத்தம் 1179 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய நெல் சேமிப்புத் தளங்கள், வட்டச் செயல்



முறை கிடங்குகள் மற்றும் பழைய கிடங்குகளைப் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டு எத்தனை மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

### நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்!

எங்கள் ஆட்சியில் மொத்தம் 32 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 200 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டன. 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 20 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், பஞ்சநதிக்கோட்டையில் ஒரே நாளில் 200 டன் நெல் கொள்முதல் செய்யும் அதி நவீன நெல் கொள்முதல் நிலையம் அமைத்தோம்.

### கழக ஆட்சியில் வேலை வாய்ப்பு!

3577 பேர்களுக்குப் பணி நியமனமும், 265 பேர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனமும், 669 பேர்களை நிரந்தரப் பணியாளர்களாகவும் நியமனம் செய்தோம்.

### அரவை ஆலைகள் மற்றும் தரமான அரிசி!

கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் அரவை முகவர்களின் ஆக எண்ணிக்கையை 618 உயர்த்தியும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான 21 நவீன அரவை ஆலைகளிலும் 30 இலட்சம் முதல் 50 இலட்சம் ரூபாய் செலவில் கலர் சார்ட்டர் இயந்திரம் பொருத்தப்பட்டு மக்கள் மகிழும் வண்ணம் நியாய விலைக் கடைகளில் தரமான அரிசியைத் தொடர்ந்து வழங்கி வந்ததைப் பொதுமக்கள் நன்கு அறிவார்கள்.

### சிறப்பு பொது விநியோகத் திட்டம்!

2007-2008 -ஆம் ஆண்டில் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்தி ஏழை, எளியோர் பயன்பெறக் கூடிய வகையில் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கு துவரம் பருப்பு, உழுந்தம் பருப்பு, பாமாயில் மற்றும் மைதா மாவு என அனைத்தையும் மானிய விலையில் வழங்கி இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செய்ய முடியாத திட்டத்தை செயல்படுத்தி ஏழை, எளிய மக்களுக்கு புரதச் சத்து வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வழிவகை செய்தவர் தலைவர் கலைஞ அவர்கள்.

ஆண்டுதோறும் சிறந்த நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களை ஊக்குவிக்க மாநில மற்றும் மாவட்ட

## நகைக்கடன் 19 ஆயிரத்து 600 கோடி ரூபாய் தள்ளுபடி - விவசாயிகள் - மகளிர் வாழ்வில் ஒளியேற்றியவர் மு.க.ஸ்டாலின்!

அளவில் ரொக்கப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வந்தோம்.

இதுபோன்ற பல திட்டங்களால் உலகளாவிய நீடித்த வளர்ச்சி குறியீடுகளில் ஒன்றான பட்டினி இன்மையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது.

### கண்கருவிழி சரிபார்ப்பு முறை!

33 ஆயிரத்து 750 விற்பனை முனைய இயந்திரங்களில் கண்கருவிழி சரிபார்ப்பு முறையைத் தமிழ்நாடு முழுதும் அமலப்படுத்தினோம்.

முதியோர், உடல் நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அத்தாட்சி அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் பொருள்கள் பெறும் வசதியை எங்களுடைய ஆட்சிக் காலத்தில் இணைய வழியில் அறிமுகப்படுத்தியதால் இன்று வரை 1 இலட்சத்து 59 ஆயிரத்து 542 குடும்பங்கள் பயன் பெற்று வருகின்றன.

### தாயுமானவர் திட்டம்!

65வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும் வீடு தேடி பொருள் வழங்கும் தாயுமானவர் திட்டத்தில் சுமார் 16 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெற்று வருகின்றனர்.

### நுகர்வோர் வழக்குகளைத் தீர்த்து வைத்ததில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம்!

மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையங்களில் அனைத்துப் பணியிடங்களையும் நிரப்பியதால் இந்தியாவிலேயே நுகர்வோர் வழக்குகளைத் தீர்த்து வைத்ததில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு முதல் பரிசு!

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்கு இந்திய அளவில் அதிகக் கிடங்குகளைப் பதிவு செய்தமைக்கான முதல் பரிசை எங்களுடைய ஆட்சிக் காலத்தில் பெற்றோம்.

77.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 36 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் கொள்ளளவில் புதிய சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டு 83 பழைய கிடங்குகளைப் புனரமைக்கப்ட்டன.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின்

ஆண்டு வருமானம் 140.81 கோடி ரூபாயாக உயர்வு

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மொத்த வருவாய் 2020-2021 நிதியாண்டில் 81.44 கோடி ரூபாயாக இருந்தது.

தற்போது கிடங்கு பயன்பாட்டுத் திறன் அதிகரித்ததன் காரணமாக 2024-2025 அன்று முடிந்த நிதியாண்டில் 140.81 கோடி ரூபாயாக வருவாய் உயர்ந்துள்ளது.

பொது விநியோக வழித்தட மேலாண்மைத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக ஒன்றிய அமைச்சர் விருது வழங்கி கௌரவித்தார்.

தொலைந்து போன அல்லது முகவரி மாற்றம் வேண்டிய குடும்ப அட்டைகளை அஞ்சல் வழியில் ரூ.50/ Onlineல் பணம் செலுத்தி தங்களது இல்லங்களில் நகல் குடும்ப அட்டையைப் பெற்றுக் கொள்ள 5.4.2023 அன்று ஆரம்பித்து வைத்தோம். இதன் மூலம் 12 இலட்சத்து 47 ஆயிரத்து 621 பேர்கள் நகல் அட்டைகளைப் பெற்றனர்.

புதிதாகத் திறக்கப்பட்ட முழு /

பகுதி நேர நியாய விலைக் கடைகள்

5 ஆண்டு கழக ஆட்சியில் 3 ஆயிரத்து 618 புதிய கடைகள் திறக்கப்பட்டன.

முழுநேரக் கடைகள் : 1064, பகுதி நேரக் கடைகள் : 2554

### நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் – ஒன்றிய அமைச்சர் பாராட்டு!

4 ஆயிரத்து 946 நியாயவிலைக் கடைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. எங்கள் தலைவர் அங்கீகரித்த மாதிரிக் கட்டட வரைபடத்தைப் பார்த்த ஒன்றிய அமைச்சர் மாண்புமிகு பியுஸ் கோயல் அவர்கள் தமிழ்நாட்டைப் போன்று அனைத்து மாநிலங்களும் செயல்பட வேண்டும் என்று டெல்லியில் நடந்த அனைத்து மாநிலங்களின் உணவு அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவித்தார்

### முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளை முன்னுரிமைக் குடும்ப அட்டைகளாக மாற்றம்!

25 இலட்சத்து 24 ஆயிரத்து 856 முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் முன்னுரிமைக் குடும்ப அட்டைகளாக மாற்றப்பட்டதில் 80 இலட்சத்து 44 ஆயிரத்து 66 பேர் பயன்பெற்றனர்.

### குடும்ப அட்டைகளின் தரவுத்தளம் மேம்படுத்துதல்!

34 இலட்சத்து 52 ஆயிரத்து 916 இறந்த நபர்கள் தரவுத் தொகுப்பிலிருந்து நீக்கம். இறந்த நபர்களாலும் இடப்பெயர்வாலும் 7 இலட்சத்து 76 ஆயிரத்து 888 குடும்ப அட்டைகள் ஒப்பளிப்புச் செய்யப்பட்டன.

### குடிமைப்பொருள் வழங்கல்!

குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் 2 புதிய எஸ்.பிக்களை நியமித்தோம்.

பயோ டீசல் கலப்படத்தைத் தடுத்து நிறுத்தியதை ஆயில் நிறுவனங்கள் அனைத்தும் பாராட்டின. இருமடங்கு கைதுகள், அதிக வழக்குகள் மற்றும் வாகனம் கைப்பற்றல் என அனைத்திலும் முன்னேற்றம் காண்பித்தோம். கடத்தலில் பிடிபடும் வாகனங்களை விரைந்து ஏலம் விடுவதில் சாதனை நிகழ்த்தப்பட்டது.

தமிழ்நாட்டில் மக்கள் தினந்தோறும் பயன்படுத்தும் உணவுப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. விலையைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

2006 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் விவசாயிகளின் 7000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்தார். அதில் நீண்ட கால பண்ணைக் கடனையும் தள்ளுபடி செய்த பெருமை தலைவர் கலைஞரையே சாரும்.

அதுமட்டுமின்றி விவசாயிகள் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனை உரிய காலத்திற்குள் தவணை தவறாமல் செலுத்துபவர்களுக்கு வட்டி இல்லா கடன் இந்தியாவிலேயே வழங்கிய ஒரே தலைவர் கலைஞர்.

### நகைக்கடன் தள்ளுபடி!

2021ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எங்கள் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் விவசாயிகளின் கடன், கூட்டுறவு வங்கிகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெற்ற கடன்கள், 5 பவுன் வரையிலான நகைக் கடன் என மொத்தம் சுமார் 19 ஆயிரத்து 600 கோடி கடனை முழுமையாக தள்ளுபடி செய்து விவசாயிகள், மகளிர் வாழ்வில் ஒளியேற்றியவர் எங்கள் தளபதி மு.க.ஸ்டாலின் பெருமையோடு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் வாங்கிய கடன்களில் 75 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி என்றும் 35 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி என்று அறிவித்திருக்கிறீர்கள் எனவே அனைவருக்கும் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகளில் கோதுமை மாவாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளீர்கள். கோதுமையாக வழங்கினால் ஓராண்டு வரை பாதுகாப்பாக வைக்க முடியும். ஆனால், மாவாக வழங்கினால் மூன்று மாதத்திற்கு மேல் வைத்திருக்க முடியாது. ஆந்திர மாநிலத்தில் கோதுமை மாவு கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

எவ்வாறு தமிழ்நாட்டில் இதை செயல்படுத்தப் போகிறீர்கள் என்பதைத் அறிய விரும்புகிறேன்.

உணவுத்துறையில், குடிமைப்பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை, நுகர்வோர் நீதிமன்றங்கள் என அனைத்திலும் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கண்டோம். எங்களைப் போன்று இந்த அரசும் செயல்பட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டு என் உரையை நிறைவு செய்கிறேன்.

### தொகுதி கோரிக்கைகள்!

ஒட்டன்சத்திரம் தொகுதி, பழனி, கொடைக்கானல், மடத்துக்குளம், உடுமலைப் பேட்டை, ஒட்டன்சத்திரம் ஆகிய வட்டங்களை ஒன்றிணைத்து, பழனியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டமாக பிரிக்க வேண்டும்.

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்